//தனி கவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.1725/அ4/2024 நாள். 22.07.2024

---

பொருள் : பள்ளிக் கல்வி – 2024–2025ஆம் ஆண்டு பொதுமாறுதல் கலந்தாய்வு – வேலூர் மாவட்டம், அரசு / நகரவை/ மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான **பொதுமாறுதல் (மாவட்டத்திற்குள்) கலந்தாய்வில் கலந்துக் கொள்ள தெரிவித்தல்** – தொடர்பாக.

பார்வை : சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26366/சி3/இ1/2024நாள்.22.06.2024.

-----

வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/ நகரவை/ மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான 2024–2025ஆம் ஆண்டு பொதுமாறுதல் கலந்தாய்வு 23.07.2024அன்று நடைபெற உள்ளதைத் தொடர்ந்து கலந்தாய்வில் கலந்துக் கொள்ள ஏதுவாக, பொதுமாறுதலுக்கு விண்ணப்பித்துள்ள முதுகலை பட்டதாரி ஆசிரியர்களை **பணியிலிருந்து விடுவித்து** அனுப்பி வைக்க அனைத்து அரசு/ நகரவை/ மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. **முதுகலை பட்டதாரி ஆசிரியர் (மாவட்டத்திற்குள் – Within District Counselling) கலந்தாய்வு 23.07.2024 அன்று காலை 09.00மணிக்கு**

   **இடம் – கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலகம், (SSA Office, Katpadi)**
   **ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
   **காந்தி நகர், காட்பாடி, வேலூர்.**

2. **முதுகலை பட்டதாரி ஆசிரியர் (மாவட்டம் விட்டு மாவட்டம் – Inter District Counselling) கலந்தாய்வு 24.07.2024 அன்று காலை 09.00மணிக்கு**

   **இடம் – முதன்மைக் கல்வி அலுவலகம், (CEO Office, Collectorate B Block., Vellore)**
   **மாவட்ட ஆட்சியரக வளாகம்**
   **சத்துவாச்சாரி**
   **வேலூர்.**

//ஒப்பம் //

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.